கன்னிகாபரமேஸ்வரிதுணை.

இஃது

கோயமுத்தூர்

ஆர்ய வைசியகுல கனதனவான்கள்

வேண்டுகோளுக்கிணங்கி

கன்னிகாபரமேஸ்வரி மீது

கோயமுத்தூர்

செந்தமிட்ச் சந்தக்கவி,

வா. மு. பொன்னுசாமி செட்டியாரால்

இயற்றிய

பஜனாமிர்த கீதாநந்தம்.

இதனை

கோயமுத்தூர்

ஆர்ய வைசியகுல திலக ரத்னாகரம்

ஊ. முத்து வெங்கிட்டராம செட்டியார் அவர்கள்

திரவிய சகாயத்தால்

கோயமுத்தூர்

பிரண்ட்ஸ் அஸோஸியேஷன் லிமிடெட், அச்சாபீசில்
பதிப்பிக்கப்பெற்றது.

1913.

Q25:417
N13
170392

கன்னிகாபரமேஸ்வரி துணை.

இஃது

கோயமுத்தூர்

ஆர்ய வையிசியகுல கனதனவான்கள்

வேண்டுகோளுக்கிணங்கி

கன்னிகாபரமேஸ்வரி மீது

கோயமுத்தூர்

செந்தமிட்ச் சந்தக்கவி,

வா. மு. பொன்னுசாமி செட்டியாரால்

இயற்றிய

பஜனாமிர்த கீதாநந்தம்.

இதனை

கோயமுத்தூர்

ஆர்ய வையிசியகுல திலக ரத்னகரம்

ஊ. முத்து வெங்கிட்டராம செட்டியார் அவர்கள்

திரவிய சகாயத்தால்

கோயமுத்தூர்
பிரண்ட்ஸ் அஸோஸியேஷன் லிமிடெட், அச்சாபீசில்
பதிப்பிக்கப்பெற்றது.

1913.

MADRAS

கன்னிகாபரமேஸ்வரிதுணை.

விஞ்ஞாபனம்.

அன்பார்ந்த தவபுண்ணிய சீலர்களே,

கோயமுத்தூர் ஆர்ய வையிசியகுல ஊ. முத்து வெங்கிட்டராம செட்டியாராகிய நான் நங்குல தெய்வமான கன்னிகாபரமேஸ்வரிமீது நம்மினத்தோர்கள் வேண்டுகோளுக்கிணங்கி நமது சொந்தச்செலவில் கன்னிகாபரமேஸ்வரி உற்சவகாலங்களிலும் மற்ற காலங்களிலும் சைவ வைணவ மற்றெல்லா பக்திமான்களெல்லோரும் பாடித்தொழுது பணிந்திறைஞ்சி பக்திமேலிட்டு பரவசமுற்று தெய்வீக அருள்பெற்றுய்வான்வேண்டி இப்பஜனை கீதங்களை அச்சிட்டு தலசத்தியான கன்னிகாபரமேஸ்வரியின் சரணார்ப்பணஞ் செய்விக்கலானேன்.

இங்ஙனம்,

ஊ. முத்துவெங்கிட்டராம செட்டியார்,

கோயமுத்தூர்.

கன்னிச்சரபம் உடுமலை

பு. ப். முத்துசாமிக் கவிராயரவர்களால்

இயற்றிய சாற்றுக்கவி.

கட்டளைக்கலிப்பா.

அன்னை தந்தை குருதெய்வம் ஆதியாம்
    அகிலத் தோர்க்கு அருள்தருஞ் சோதியாம்
கன்னி காபர மேஸ்வரி கர்த்தவ்ய
    காரணி எனும் பூரணி ஞானிமேல்
சொன்ன கீதந் தனில்மிகு சொற்பொருள்
    சுவைகற் கண்டுதேன் சீனிபால் பாகென
பொன்னு சாமிப் புலவன் புகன்றதிப்
    பூமி வானவர்க் கும்புனிதந் தானே.

தூத்துக்குடி ஸ்ரீலஸ்ரீ தா. சங்கரதாஸ் சுவாமிகள்

இயற்றிய சாற்றுக்கவி.

அறுசீர்க்கழில்நெடில் அடி விருத்தப்பா.

சொன்னயமும் பொருணயமும்
    தொடைய டுக்குந் தொகுத்துச்சேர்த்து
மன் னுகன்னி காபரமேஸ் வரிமீது
    மா துரியப் பதங்களது மகிழ்வுகொள்ளக்
கன்னல்தேன் கனிரசமுங் கற்கண்டுங்
    கலந்தொப்பக் கவிஞ னை
பொன்னுசா மிக்குரிசில் பூமிக்கோர்
    புண்ணியமாய்ப் புனைதல் செய்தான்.

விநாயகர் துதி.

வெண்பா.

கன்னிபர மேஸ்வரியைக் கருதிப் பஜனைசெய்யப்
பன்னுதமிட் கீதங்கள் பாடுதற்க்—கென்நாளும்
குற்றமேவா ராது குவலயத்தி லேசிறக்கக்
கற்றைச் சடைத்தநயா கார்.

அம்பா மதுரை மீனாக்ஷி - என்ற மெட்டு.

இராகம்-தேசிகம். தாளம்-ஆதி.

கார்ப்பாய் கோயநகர்த்தாயே கன்னி
காபரமேஸ்வரி நீயே கடைக்
கண்ணருள் தருகுவாயே
கருத்திலிருப்பாயே (அம்பா கார்)

தீர்த்தாள் பாபமெனுங்கோரம் நல்ல
சித்தியற்ற சம்சாரம் பந்தஞ்
சேரக்கொண்டீடன் பெரும்பாரம்
திருத்துமுபகாரம் (அம்பா கார்)

புல்லர் சங்கமதை நாடி பொய்
புலையெனுங்களவு தேடி யானும்
புரிந்தேன் பாப செயல்கோடி
புனிதந்தாருங் கூடி (அம்பா கார்)

சாற்றும் அடியர்க்குபகாரி பொன்னு
சாமி சொற்குதாரி இந்தச்
சமயம் நானே கோரிச்
சரணடைந்தே நேரில் (அம்பா கார்)

தா நின்னருளின்று தாயே மீனாக்ஷி - என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி.   தாளம்- ஆதி.

பல்லவி.

கார்த்தருள் புரிவாய் கன்னிகாமணியே

அனுபல்லவி.

கன்னிகாமணியே கன்னிகாமணியே   (கா)

சரணம்.

பூர்த்தியாம் மனத்தோடு பூம்பாதம் பணிந்திட்டேன்
புரியுங்கருணைவெள்ளம் புலையன் கும்பிட்டேன்   (கா)

பக்திமார்க்கந்தெரிந்து பர்டநான் அறியேன்
படர்ஞானமொடுதுதி பண்ணவுந்தெரியேன்   (கா)

பொருந்துமடியார் சேவை புண்ணியம் இல்லேன்
பொன்னுசாமி சொற்றமிழ் பூரிக்கக்கல்லேன்   (கா)

மீனாக்ஷி மதுரை ராணி - என்ற மெட்டு.

இராகம்-சங்காராபரணம்.   தாளம்-ஆதி.

கன்னி கா பரமேஸ்பரி
காரும் காரும்
கார்த்தருள்வாயே பூர்த்தியாய் நீயே
காருண்யம் வைப்பாய்   எனக்
காருந்திக்கில்லை
ஆழ்வதுன் பார மின் நேரங்கண் பார்   (கன்னி)

நாட்டமுற்றேனே நலந்தருந்தேனே
நம்பினேன் நானே
நாயேனைக்காரும்
நரசிங்கவாஹனி
நற்பொன்னுசாமியின் சொற்சொன்னேன்
பொற்பாதந் தா (கன்னி)

சத்தகலந்தரு பந்தரு - என்ற இந்துஸ்தான் வர்னமெட்டு.

இராகம்-கரகரப்பிரியா. தாளம்-ஆதி.

கன்னிகா பரமேஸ்வரி கருணைகரி
காலபைரவியே யுனைக்கோரி
கருத்துறத்துதிக்கும் யென் வருத்தமே தவிர்த்திடும்
கரதிரி சூலி சீலி யலங்காரி
கனவான வாழ்விலே கலந்து நானலைந்தேனே
கரங்கூப்பியுனையே தோளாமலே சூலைந்தேனே
கடாக்ஷம் புரி வாயம்மணி
காரும் பொன்னு சாமிபன்னுஞ் சீர்தமிழ் முன்னுங் (கன்)

தேரிமோரிஜோடி பனுமுஜதே-என்ற இந்துஸ்தான் மெட்டு.

இராகம்-பியாகு. தாளம்-ஆதி.

பல்லவி.

கன்னிகா பரமேஸ்வரி எந்தாயே

அனுபல்லவி.

கடாக்ஷம் புரிகுவாயே (கன்னி)

சரணம்.

அன்னை தந்தை எலாம் நீதானே—யலால்
ஆதாரம் வேறில்லையே மானே
நின்னையல்லால் தெய்வம் யார்தேனே—இந்த
நிஷ்டூரஞ் செய்தாலென் செய்வேனே
நீடுலகம் புகழ் திரிசூலி-யருள்வேலி
யாம்நீலி-யனுகூலி (கன்னி)

மாயன் மகிழ்ந்திடுஞ் சோதரி—பக்தி
மார்க்கந்தந்தேனன்னை யாதரி
சேயன் பாவந்தீர் புராதரி—ஞான
சித்திதாருங்கருணாகரி
தேமிகுஞ்சொற் பொன்னுசாமிச்சொல்-லேபாடி
நாணேடி-யேதேடி-னேன்வாடி (கன்னி)

அச்சமொரி லாகிசே - என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி. தாளம்-ஏகதாளம்.

பல்லவி.

கன்னிகா பரமேஸ்வரி காருஞ்ஜெகதீஸ்வரி

அனுபல்லவி.

ஈஸ்வரி பர மேஸ்வரி.

சரணம்.

மின்னலாம் வாழ்வு மேவிட்ட தாழ்வு
வினைதானே தனக்கானே
னினிநானே தானே (கன்னி)

மாயா விகாரம் மாறு விசாரம்
மலைநீங்க வலைவாங்க
நிலைதாங்க ஓங்க (கன்னி)

தமிழ் பொன்னுசாமி தான்போற்றும்பூமி
தரநீலி கரபாலி
திரிசூலி சீலி (கன்னி)

காணவேணும் காணவேணும் - என்ற காவடிச்சிந்து மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு. தாளம்-ஆதி.

கன்னிகா பரமேஸ்வரித் தாயே எந்தன்
அன்னையேநீ காத்தருள் செய்வாயே நல்ல
கல்விஞான மில்லாமலே சொல்லவந்தேன்
செந்தமிழ் நற்கீதம் தாரும் போதம்.

நித்தியப்பேரின்ப ஞானத்தோடு துதி
பக்திமார்க்க சங்கந்தனிற் கூடும் மனம்
நேர்மையில்லா தோர்குறைஎன் நெஞ்சமதில்
மிஞ்சிநின்ற தேனோ விதி தானோ.

சத்திசிவ சாம்பவிய கௌரி வீரி
சுத்தசைதன்னிய கவுமாரி வினை
சூழ்ந்தபவம் ஆழ்ந்தபந்தம் வீழ்ந்தலைந்தேனே
புலையன் நானே யருள் தானே.

எத்தனைநாள் இத்துயிர்நான் கொள்வேன் அருள்
வைத்திடாமல் விட்டாலேதோ விள்வேன் அம்மா
இன்ப பொன்னுசாமிபதம் அன்புடன் சொன்னேன்
அருள்நீ தாரும் என்முன் வாரும்.

மஞ்சுநிகர் குந்தளமின்னே - என்ற காவடிச்சிந்து மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு. தாளம்-ரூபகம்.

கன்னிகா பரமேஸ்வரியே கருத்தில்நின்று வருத்தமின்றி
காத்தருள்புரி ஈஸ்வரியே முன்
கருமவினைதனி லுறுபிறவிதனை
யொருவியுனதடி மருவிசரணுற
கல்விஞானமொன்று தாருமே கலிதவிர்க்க நிலைபெருக்க
கண்மணி நீ என்முன் வாருமே (கன்)

சண்டன்வாதை நீக்கியாளுமே சக்கரபாணி உக்கிரவேணி
சந்ததம் என் சிந்தை வாழுமே பொன்னு
சாமிசெந்தமி ழேமிகுந்திட
பூமிமீதினி லேதுதிப்பவர்
பாபவிருள் நீதவிர்த்திடு பரமசிவி தருமவேலி
பக்தி நெஞ்சிலே பதித்திடு (கன்)

பூமிமெச்சிடும் - என்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு. தாளம்-அடதாள சாப்

காசினிக்குள்பிர காசரத்னமான ஆதியே
மனு நீதியே பிரக் யாதியே கன்னி
காபரமேஸ்வரி யாகிநின்ற பரஞ் சோதியே.

நித்தியம்உமது நித்யபாதமலர் கோரியே
நின்றேன் வீரியே கௌ மாரியே மிகு
நேர்த்திநாரசிங்க வாகனத்தில்வாழ் சிங் காரியே.

மாயையுற்ற பாச மோயுநானுன்னருள் தாருமே
என்முன்வாருமே பாவந் தீருமே மத
மாச்சர்யம் விலக்கி மாதிருவருட்கண் பாருமே.

தேமிகுஞ்சொல் பொன்னுசாமி செந்தமிட்க் குதாரியே
யலங்காரியே சுக வாரியே ஜெக
தீனரக்ஷக கிருபாநிதி எனும் கம் பீரியே.

செந்தின்மா நகரந்தனில் மேவிய-என்ற காவடிச்சி மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு. தாளம்-ரூபகம்.

ஏழையேன் மீதில் வாதினம் ஏனம்மா
ஈதென்ன உன்மனங் கல்லு அருள்
எப்போவரும் அதைச் சொல்லு சேயை
ஈன்றதாய்க்கொரு தோன்றலுண்டெனில்
ஏதிடஞ்செலுவேன் திடஞ்சொலும் (ஏழை)

கார்த்திடுங் கன்னி காபர மேஸ்பரி
காருண்யம் வைத்தென்னை யாளும் நலங்
கூறும்படி நெஞ்சில் வாழுங் கோதில்
கோமளக்குயி லான சுந்தரி
வாமுனந்தியே நிரந்தரி (ஏழை)

தேஞ்சொல் பொன்னு சாமிக்குறு தீங்கெல்லாம்
தீர்த்தருள் தந்திட்ட நீலி எனைக்
கார்த்தருளுந்தர்ம வேலி எந்தன்
சேதிகண்டினி தாகவுன்னரு
ளேதரும்படி கோரினேனிதோ (ஏழை)

தாசராஜ மெட்டு.

இராகம்-தோடி. தாளம்-ரூபகம்.

காளகூட பைரவிநீ கார்த்தருள்புரி
கன்னிகா பர மேஸ்வரி வீரி கௌரி காம சுந்தரி

கனகபீதாம்பர னொருதுணை யெனவரு கருணை கரி கோரி
கடையனுன் னடியனின் மிடிதவிர்த் திடவருட் கடல்தாசுகவாரி
கந்த கதம்ப சுகந்த மணிந்த பதந்தொழ
வுந்தனெ ரருள்தாரி
காசினிபுகழ் பொன்னுசாமி தமிட்குக்
கடாக்ஷம் புரி கௌரி
கடாக்ஷம் புரி கௌரி
கடாக்ஷம் புரி கௌரி கௌரி (காள)

சுந்திரா சுகுணமாரா - என்ற டான்சு மெட்டு.

இராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தாயே யருள்நீயே தருவதற்
கொருதடை யிலே வருவாயே

அனுபல்லவி.

என் சிந்தை நாளும் நொந்து ஜெகமதில்
திரியும் புலையனொரு பேயே
பிழை பொருத்தாண்டு உளம்மகிழீண்டு
வழிதுறையறியும் மனம்பூண்டு (எங்)

சரணம்.

பொய்யான வாழ்வை நம்பி பொன்னோடு
புவி யழகியர் மையல் வெம்பி
மெய் யாமுனைவிரும்பி டாமலே
வினைவழி மனமுந் திரும்பி
மிகுஜெகமோகம் வெகுவிதபோகம்
அகமகிழவடைந்தேன் யோகம் (எங்)

கன்னிகாபரமேஸ்வரி கௌரி
கருதுமுன்னிரு பதத்தியானம்
பொன்னுசாமி சொற்குதாரி அடியர்கள்
புரியுங்கவ சிலாக்யமோனம்
தனக்குறுகாணி தினத்தில்நீபேணி
மனத்துயர்தீருங் கல்யாணி (எங்)

கொஞ்சம் தயவுசெய்யடி - என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஏகதாளம்.

ஏழை எனக்கருளும் வேளை யீதம்மம்மா
என்மேலின்னம் வாதோ சும்மா என்னம்மம்மா
என்மேலின்னம் வாதோ சும்மா
எங்கும் நிறைந்திடுந் தங்கப்பிரகாசி
சிங்கவாகனந் துலங்கும் நன்னேசி (ஏ)

மானிலமே புகழும் ஞானவினோதினி
மகிடாசுர சம்மாரினி என்னம்மணி
மகிடாசுர சம்மாரினி
மாற்றறியாத செழும்பசும்பொன்னே
தேற்றுவாரில்லைநீ சேரும் என்முன்னே (ஏ)

சித்தர் முத்தர்கள் துதி சுத்தசைதன்னியே
சேயேன் செய் குற்றம் மன்னியே விற்பன்னியே
சேயேன்செய் குற்றம் மன்னியே
சீர்பொன்னுசாமியின் செந்தமிட்சொல்ல
பார்கடைக்கண்ணால் பாவமேசெல்ல (ஏ)

ஆயசய்யா - என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்.   தாளம்-ஆதி.

அன்னைராணி அன்பர்களுள்ளங்காணி
யாகிநிற்கும் கல்யாணி
கன்னி கா பர மேஸ் வரியே கார்நீ
கார்த்திடும் வேதஞானி
பார்த்தருள் கூறும் மோனி
பாருலகோர் கோரிவரும்
வீரிகவு மாரி எனும் (அன்)

போற்றுல கோர்க் கின்பந் தாரும் பூவே
பூமியில் திகழ் காவே பொன்னு
சாமித்தமிழ் பாவே
போதமெனும் வேதநிதி
மாதேநீயும் வாததியே (அன்)

பன்னிருசீரடி ஆசிரியம்.

கவிஞருக் கொருகாசு மீயாத லுத்தர்கள்
கபாலம் வெடித்திறக்கக்
கருணைபுரி கன்னியே உனதடியர் தூஷணைக்
கசடர்குலம் வேரறுப்பாய்
புவியினிற் பெரியோர்கள் தமைநிந்தை செய்பவர்கள்
புலைநரகமது புக்கிடப்
பூரணி யுன்னருளை வேண்டினேன் மற்றொன்று
புகழ்வேத மோதுமறையோர்

நவில்ஞான போதகர் சங்கீத காயனர்
நன்மைசுர ஞானியோரை
நற்கீர்த்தி பேசாமல் துஷ்கீர்த்தி சொல்லுவர்கள்
நாசமாய் நாட்டிலென்றும்
குவியும்மழல் நரகிடைக் கோடிகா லம்வரைக்
கொடுமையுட னுழல அருள்வாய்
கோயநகர் மேவுநன் னேயகன வைசியர்கள்
குலதெய்வ மானமணியே.

கோழிகள்கொக்கரக் கோவெனக்கூவின - என்ற மெட்டு.

இராகம்-பியாகு. தாளம்-ஆதி.

மங்களம்.

மன்னுங் கன்னிகா பரமேஸ்பரித் தாயே
வாழ்த்தினேம் நித்ய சுபமங்களம்
மாற்றறியாத செழும்பொன் மாணிக்கமே
வந்தித்தேன் நித்ய சுபமங்களம்.
இந்திராதி தேவர்கள் வந்து தொழும்பாத
செந்தாமறைக்கு திவ்யமங்களம்
எங்கும் பிரகாசந் தங்குந் திருவடிக்
கென்றென்றும் திவ்ய சுபமங்களம்.
பூபாலர் போற்றிடும் பூம்பாத சேவைக்கு
பூரிக்க நித்ய சுபமங்களம்
பூதாதி நாயகி புவனப்ரதாயகி
பூம்பாதத்திற்கே . சுப மங்களம்.
மங்களமாகிய சிங்கவாஹனி

மகிடாசுரமர்த்தனி மங்களம்

மன்னும் பொன்னுசாமி கன்னல் மொழியாலே
வந்தித்தேன் நித்ய சுபமங்களம்.

வாழி.

வாழி வாழிவிண் மண்ணது வாழியே
வாழி வாழிநூல் வாசகன் வாழியே
வாழி வாழியச் சேற்றுவோர் வாழியே
வாழி வாழிவா சிப்போர்கள் வாழியே.

முற்றிற்று.

ஐயன்மீர்

இந்நூலாசிரியரால் இயற்றிய கீர்த்தாமிர்த சேகரம் 1, ஏகாதசி இராமபஜனை கீதம் 2, தெண்டபாணி பஜனை கீதம் 3, புரங்கூறும் புல்லர் நெஞ்சம் பிளக்கும் கோடாரி 4.

கூடிய சீக்கிரம் வெளிவரும்.

வா. மு. பொன்னுசாமி செட்டி,

செந்தமிட் சந்தக்கவி,

கோயமுத்தூர்.